Registerd as a News Paper
பக்கங்கள் 04
விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 28 | [10-06-93] | வியாழக்கிழமை | ஓசை 112

Y.M.C.A

## மருத்துவ உபகரணங்கள் அனுப்ப சுகாதார அமைச்சு அதிகாரி உறுதி

கொழும்புத் துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த யாழ். வைத்திய சாலைக்கு பிரிட்டனால் வழங்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள் விரைவில் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்படும் என சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி பிரிட்டிஷ் தூதுவருக்கு உறுதியளித்துள்ளார் என செய்திகள் தெரிவிக்கின்றன. பிரிட்டிஷ் அரசாங்கம் இது தொடர்பாக சிறிலங்கா அரசுக்கு கொடுத்த அழுத்தமே இவ் உறுதி மொழிக்கு காரணம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ் உபகரணங்களை விடுதலைப்புலிகள் உபயோகிப்பார்கள் என்பதனாலேயே இவை யாழ். அனுப்பிவைக்கப்படவில்லை என முன்னர் வந்த செய்திகளை மறுத்த சுகாதார அமைச்சின் செயலாளர் ஜோ. பெனான்டோ சுங்க பரிசோதனைக்குப் பின்னர் இப் பொருள்கள் யாழ். வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படும் என பிரிட்டிஷ் தூதுவருக்கு உறுதியளித்துள்ளார் இவ்...

(4ஆம் பக்கம் பார்க்க)

# போர் நிறுத்தத்திற்கு புலிகள் தயார்!

# சமரசத்திற்கு அரசு முயலவேண்டும்

## வீரச்சாவு

### லெப். மிதுலன் (வேண்மா)

01-5-93 திருக்கோணமலையில் நடைபெற்ற நேரடி மோதலில் விழுப்புண் அடைந்து வைத்திய சிகிச்சைபெற்று வந்த லெப். மிதுலன் (வேண்மா) (தம்பிராசா சுரேந்திரன் வர்ணமேடு; தம்பலகாமம்; திருக்கோணமலை] நேற்று வீரச்சாவு அடைந்தார். இவரது வித்துடல் இன்று பி. ப. 2-30 மணிக்கு அரியாலை முள்ளி கலைவாணி சனசமூக நிலையத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் மக்கள்

[4ஆம் பக்கம் பார்க்க]

## சர்வதேச சமாதான குழுவிடம் விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"போர் நிறுத்தம் செய்வதற்கும், பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராகவே உள்ளது. இந்நிலையில் இதற்கான சமாதான சூழ்நிலை ஒன்றை உருவாக்கும் பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்தது" இவ்வாறு நேற்று தம்மைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய வெளிநாட்டுச் சமாதானத் தூதுக்குழுவினரிடம் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். இச் சந்திப்பு சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை நீடித்தது.

நேற்று மாலை 5-30 மணியிலிருந்து 7-30 மணி வரை இடம்பெற்ற சந்திப்பின் போது, நல்லெண்ணத் தூதுக் குழுவைச்சேர்ந்த வணக்கத்திற்குரிய கலாநிதி சொம்சை உஷலசிற்றோ (தாய்லாந்து) வண. ஆண்டகை யூ ஆன் டடயர்ஸ் பியூபிளஸ் (பிலிப்பைன்ஸ்), வண. ஆண்டகை ஏ.செல்வநாயகம் (மலேசியா), வண பிதா றினியோ கோர்டோன்சில்லர (பிலிப்பைன்ஸ்), வண ரோலியன்ஸ் பிறிஸ் (புரூணை), ஜோ. வில்யம் (கொழும்பு) பிரிட்டன்சர்வதேச உறவுநிலையத்தைச் சேர்ந்த செல்வி கத்தரின்ஸ்பயேர்ஸ் ஆகியோருடன் யாழ். ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் உட்பட மேலும் சில கத்தோலிக்க குருமாரும் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நல்லெண்ணக் குழு செஞ்சிலுவையைசந்தித்தது

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் வெளிநாட்டு நல்லெண்ண சமாதானக்குழுவினர் நேற்று செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக்குழுவின் யாழ். வதிவிடப்பிரதிநிதியை சந்தித்து உரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பின்போது சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் யாழ். குடாநாட்டில் மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்தனர். சுமார் அரைமணிநேரம் இச்சந்திப்பு இடம்பெற்றது. கொழும்பில் இருந்து நிவாரணப் பொருள்களை குடாநாட்டுக்கு எடுத்து வருவதில் ஏற்படும் சிரமங்கள் குறித்தும் இவர்களிடம் எடுத்துரைக்கப் பட்டது.

## நோர்வே பிரதிநிதி புலிகள் சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் வந்துள்ள ... தலைப் புலிகள் தமது அரசியல் நிலைப்பாடு குறித்து



விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வந்த வெளிநாட்டு நல்லெண்ணத் தூதுக்குழுவினரை விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் திரு நடேசன், கல்வித்துறைப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் ஆகியோர் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.


## அங்கிலிக்கன் ஆயருக்கு

உருவாக்கும் பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்தது ... துப் பேச்சுவார்த்தை நடத்திய வெளிநாட்டுச் சமாதானத் தூதுக்குழுவினரிடம் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். இச் சந்திப்பு சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை நீடித்தது.

நேற்று மாலை 5-30 மணியிலிருந்து 7-30 மணி வரை இடம்பெற்ற சந்திப்பின் போது, நல்லெண்ணத் தூதுக் குழுவைச்சேர்ந்த வணக்கத்திற்குரிய கலாநிதி சொம்சை உஷலசிற்றோ (தாய்லாந்து) வண. ஆண்டகையூ ஆன்டடயர்ஸ் பியூபிளஸ் (பிலிப்பைன்ஸ்), வண. ஆண்டகை ஏ செல்வநாயகம் (மலேசியா), வண பிதா றினியோ கோர்டோன்சில்லர் (பிலிப்பைன்ஸ்), வண றோலியன்ஸ் பிறிஸ் (புரூணை), ஜேர. வில்யம் (கொழும்பு) பிரிட்டன் சர்வதேச உறவுநிலையத்தைச் சேர்ந்த செல்வி கத்தரின்ஸ்பயேர்ஸ் ஆகியோருடன் யாழ். ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் உட்பட மேலும் சில கத்தோலிக்க குருமாரும் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில்

(4ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வந்த வெளிநாட்டு நல்லெண்ணத் தூதுக்குழுவினரை விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் திரு நடேசன், கல்வித்துறைப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் ஆகியோர் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

## நல்லெண்ணக் குழு செஞ்சிலுவையைசந்தித்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் வெளிநாட்டு நல்லெண்ண சமாதானக்குழுவினர் நேற்று செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக்குழுவின் யாழ். வதிவிடப்பிரதிநிதியை சந்தித்து உரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பன்போது சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் யாழ். குடாநாட்டில் மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்தனர். சுமார் அரைமணிநேரம் இச்சந்திப்பு இடம்பெற்றது. கொழும்பில் இருந்து நிவாரணப் பொருள்களை குடாநாட்டுக்கு எடுத்து வருவதில் ஏற்படும் சிரமங்கள் குறித்தும் இவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.

## சமாதானக் குழுவினர் அகதி முகாம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வந்துள்ள வெளிநாட்டு நல்லெண்ணக் குழுவினர் நேற்றுக்காலை அரச செயலகத்தில் அரச அதிகாரிகளை சந்தித்துப் பேசினர். மற்றும் அரியாலை, மானிப்பாய் அகதி முகாம்களுக்கும் இக் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

யாழ். நகரில் இராணுவத் தாக்குதலால் சேதமுற்ற பகுதிகளையும், பொது நூலக கட்டடம், கோட்டை ஆகியவற்றையும் குழுவினர் பார்வையிட்டனர். மாலையில் நல்லை ஆதீனத்தில் இந்து மதத் தலைவர்களை வெளிநாட்டு நல்லெண்ணக் குழுவினர் சந்தித்துப் பேசினர். முன்னாள் ஆயர் அதிவண தியோகுப்பிள்ளையையும் குழுவினர் சந்தித்தனர்.

## நோர்வே பிரதிநிதி புலிகள் சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் வந்துள்ள வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனபிரதிநிதிகளை நேற்று விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர். கொழும்பிலுள்ள நோர்வே பிரதித் தூதுவர், நோராட் அதிகாரி ஆகியோரை புலிகள் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர். புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அரசியல் பொறுப்பாளர் தமிழ்செல்வனும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது விடுதலைப் புலிகள் தமது அரசியல் நிலைப்பாடு குறித்து விளக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. தமிழ்பகுதிகளின் அபிவிருத்திக்கு நோர்வே அரசு அதிகமான உதவிகளை அளிக்க வேண்டும் என புலிகள் தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மாலையில் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளை சந்தித்துப் பேசினர்.

## கொழும்பில் தமிழரை இம்சிக்கவில்லையாம்

பாராளுமன்றத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரில் தமிழர்கள் கண்டபடி கைதுசெய்யப்படவில்லை என் பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் விமல் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். கொழும்பில் தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று வெளியாகும் செய்தியில் உண்மையில்லை

[4ஆம் பக்கம் பார்க்க]

## ஐ. நா. அதிகாரி புலிகள் இன்று பேச்சு

பூநகரிப் பாதை யூடான போக்குவரத்து, தொடர்பாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின கொழும்பு வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பீட்டர் நிக்கலஸ் இன்று இரண்டாவது கட்டமாக விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

மேற்படி பாதையூடான போக்குவரத்தை மேற்கொள்வதில் உள்ள நடைமுறைகள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக நிக்கலஸ் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்ததும், அன்றைய தினமே விடுதலைப்புலிகளுடன் இது தொடர்பான முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையை நடாத்தியதும் தெரிந்ததே.

இன்று நடைபெறவுள்ள இப்பேச்சு வார்த்தையின் போது அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. அசோக்குமாரும் கலந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பொலிசாரை விடுவிப்பதில் அரசு தீவிர அக்கறையாம்

ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸாரையும், இராணுவச் சிப்பாயையும் விடுவிக்க சகல முயற்சிகளையும் அரசு எடுத்து வருவதாக அமைச்சர் விமல் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதற்கென சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் உதவியை அரசு நாடியுள்ளதாகவும், ஏற்கனவே இது குறித்து பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பொலிஸாரை விடுவிப்பதற்காக சிறிலங்கா படையினர் கைது செய்த 60 தீவிரவாதிகளின் விபரமடங்கிய பெயர் பட்டியல் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் கூட்டுப் படைத் தலைமையகத்தினால் ஒப்படைக்கப்பட்டது என்றும் எனினும் இந்த பட்டியலை யிட்டு "விடுதலைப்" புலிகள் திருப்திகொள்ளவில்லை என்றும் அமைச்சர் விக்கிரமசிங்க கூறினார்.

படையினரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறுப்பினர்களின் பட்டியலை விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர் ஆனால் பாதுகாப்பு காரணங்களுக்காக இத்தகைய பட்டியலை வழங்கிவிட முடியாது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இன்று வரும்

கொழும்பில் இருந்து புறப்பட்ட 'நில்கிரி' கப்பல் ஒரு தொகுதி மண்ணெண்ணெய் பரல்களுடன் இன்று காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது வந்ததும் உடனேயே பரல்கள் இறக்கப்படும்.

## அங்கிலிக்கன் ஆயருக்கு வெளிநாட்டவர் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த முயன்றுவரும் அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் கென்னத் பெர்னாண்டோவின் முயற்சிக்கு பல வெளிநாட்டு தூதுவர்களும் ஒத்துழைப்புத்தர முன்வந்துள்ளதாக ஆயருக்கு நெருங்கிய கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்தவாரம் ஆயர் அதிவணக்கத்துக்குரிய கென்னத் பெர்னாண்டோ பல வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து மேற்படி விடயம் குறித்து பல மணிநேரம் பேச்சுவார்த்தை நடாத்தினார் எனவும் அப்பொழுது இம் முயற்சியை வரவேற்ற மேற்கு நாடுகளைச் சேர்ந்த பல வெளிநாட்டுத் தூதுவர்களும் அவரது முயற்சிக்கு முழு ஒத்துழைப்புத் தருவதென உறுதியளித்தார்கள் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

வடக்கு கிழக்கு பகுதியில் யுத்தம் நிறுத்தப்பட்டு நிரந்தர சமாதான சூழ்நிலை ஏற்பட்டால் யுத்தத்தினால் சிதைந்துபோயுள்ள இப்பகுதிகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவி செய்ய தயாராக இருப்பதாக உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளதாகவும்.

திரு. பிரேமதாசா கொலை செய்யப்பட்டதையடுத்து உருவாகியிருக்கும் அரசியல் சூழ்நிலையிலும் அங்கிலிக்கன் ஆயரின் முயற்சியை தொடர்ந்து மேற்கொள்ளும்படியும் இத் தூதுவர்கள் கேட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரேமா கொலை தொடர்பாக

## புலிகள் உறுப்பினர் எவரும் இதுவரை கைதாகவில்லை

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பாக இதுவரை விடுதலைப் புலிகள் எவரும் கைது செய்யப்படவில்லை என சிறிலங்காவின் உயர் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மே முதலாம் திகதி பிரேமதாசா கொலை செய்யப்பட்டது முதல் இக்கொலை தொடர்பாக 500க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் விசேட பொலிஸ் குழுவினரால் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பரவலாக கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

[4ஆம் பக்கம் பார்க்க]

மானியங்களை நிறுத்துக

## சர்வதேச நாணய நிதியம் அரசிடம் வற்புறுத்து

(கொழும்பு)

பாடசாலைப் பிள்ளைகளுக்கான இலவச பாடப்புத்தகம், உணவு, சீருடை, வழங்கல் போன்றவற்றை நிறுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் சிறிலங்கா அரசிற்கு ஆலோசனை வழங்கியுள்ளது. அத்துடன் ஜனசவிய தொடர்பான முழுச்செலவையும் இல்லாது ஒழித்தல், மண்ணெண்ணெய், டீசல், மா போன்ற பொருள்களுக்கான மானியங்களை நிறுத்தல் என்பனவும் அந் நிறுவனத்தால் சிபார்சு செய்யப்பட்டுள்ள மற்றைய விடயங்களாகும்.

வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை ஈடுசெய்ய வெளிநாட்டு உதவிகளை கூடுதலாக பெறுவதை விட செலவுகளைக் குறைப்பதே சிறந்தது எனவும் எனவே சிறிலங்கா அரசாங்கம் இவ் ஆலோசனைகளுக்கு இணங்கி நடப்பதன்மூலம் செலவுகளைக் குறைக்க முடியும் எனவும் அந் நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

இவ் விடயம் குறித்து சர்வதேச நாணய நிதியத்திற்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும்

(4ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### இராசி பலன்

திருமலை சோதிடரின் பொது இராசி பலன் விற்பனையாகின்றது விலை ரூபா 15.00 எங்கும் இடைக்கும். (சி 6800)

### விற்பனைக்குண்டு

பாவித்த சாக்கு, பொலித்தீன் பைகள் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் சங்கத்தில் பொருள்களைப் பார்வையிட்டு 1993 06 17ஆம் திகதி பி.ப. 4.00 மணிக்கு முன்னர் கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி (சி-6802)

## இடமாற்றம்

யாழ் போதனா வைத்தியசாலையில், கண் சத்திர சிகிச்சை நிபுணராகக் கடமையாற்றி கொழும்புக்கு இடமாற்றலாகிச் சென்ற வைத்தியகலாநிதி டாக்டர் திருமதி கண்ணுத்துரை, அங்கிருந்து. மீண்டும யாழ் போதனாவைத்தியசாலைக்கு இடமாற்றலாகி, நேற்றுமுன்தினம் காலை பருத்தித்துறைக்கு வந்த குமாரி கப்பலில் வந்து சேர்ந்துள்ளார். [30]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**பொதுப்பட்டமளிப்பு 1993-09-11**

டிப்ளோமாக்கள்/பட்டங்கள் / பட்டப்பின்டிப்ளோமாக்கள்/ முதுமாணி/ கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக1993.09.11 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப்பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் 93-07-15க்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

01 கலாநிதித் தேர்வு
02. முது தத்துவமாணித்

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் (சி/6733)

### பழையதும் – புதியதும்

நாடகம் - அரங்கியல் பழையதும் புதியதும். கலாநிதி சி. மௌனகுரு, தலைவர் நுண்கலைத்துறை கிழக்குப் பல்கலைக்கழகம் பாரம்பரிய நாடகங்கள் பற்றிய ஒப்பீடு இடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-6738)

## வருடாந்த உற்சவம்

சாவகச்சேரி -கோயிற்குடியிருப்பு ஞான வீரபத்திரர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

❋ ❋

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**சித்தமருத்துவப் பிரிவிற்கு1992/93ம் ஆண்டிற்கான புதியமாணவர்களை அனுமதித்தல்**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சித்த மருத்து

தோட்டத் தொழிலாளர்

## குடியிருப்புகளை திருத்த அனுமதி மறுப்பு

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்கள் தமது குடியிருப்புக்களை திருத்தவோ அல்லது மாற்றம் செய்யவோ நிர்வாகம் தொடர்ந்து அனுமதி வழங்க மறுத்து வருவதாகக் கூறப்படுகின்றது.

அண்மையில் தெரணியகலைப் பகுதியில் இழுக்குதனை தோட்டத் தொழிலாளி ஒருவர் தனது குடியிருப்பில் திருத்தம் செய்தமைக்காக தோட்ட நிர்வாகம் அவருக்கு எதிராக பொலிசில் புகார்செய்ததுடன் மேலதிகமாகக் கட்டப்பட்ட கட்டடத்தை உடைக்கவும் தோட்டத்துரை உத்தரவு பிறப்பித்தார்.

தொழிலாளர்களின் குடியிருப்புகள் அவர்களுக்கு சொந்தமாக்கப்படுவது குறித்து தோட்டத்துரைமாரிடம் விசாரிக்கப்பட்ட போது அது பற்றிய அறிவுறுத்தல் எதுவும் தமக்கு கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

அதேவேளை கூட்டுறவு சங்கம் ஒன்றை அமைக்க திட்டம் வகுக்கப்பட்டிருக்கும் போதும் அதேசமயம் அது இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### 25 பேர் சிக்கியுள்ளனர்

[வடமராட்சி]

தையிட்டிப் பகுதியில் நடைபெற்ற சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின் போது சிக்குண்டோரில் இன்னமும் 25 பேர் மீளமுடியாத நிலையில் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (யோ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**பட்டப்பின் படிப்பிற்குப் பதிவு செய்தல் – 1993**

**(கலாநிதி, முதுமெய்யியல்மாணி)**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 1992/93ஆம் கல்வியாண்டில் பின்வரும் பாட நெறிகட்கு, பட்டப் பின் படிப்பிற்காகத் தகுதி

### ஓவியப் போட்டி

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் இணையமைப்பான சன்மார்க்க நுண்கலை மன்றம் தனது ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையேயான ஓவியப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது. போட்டி முடிவுத் திகதி இம்மாதம் 21ஆம் திகதியாகும்

யாழ்ப்பாண

## மாநகராட்சி மன்றம் ஆதனவரி அறிவித்தல்

1993-ம் ஆண்டு 1-ம், 2-ம் கந்தாயத்துக்கான ஆதன வரியை 30 06-93 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாக எவ்வித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாகக் கீழ்வரும் விபரப்படி வெலியாத்துப் பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக்காணிகள் | – 15 வீதம் |
| ஏனைய காணிகளுக்கு | – 20 வீதம் |

1993 ஆம் ஆண்டு 3-ம் கந்தாயத்திற்குரிய வரியை 02-08-93 அன்று அல்லது அதற்கு முன்பாகவும், 4-ம் கந்தாய வரியை 01-12-1993 அன்று அல்லது அதற்கு முன்பாகவும் செலுத்துவோர் 5 வீதக் கழிவிற்கும் உரித்துடையவராவர்.

காசோலையாகச் செலுத்த விரும்புவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

1993-06-09.


(சி-6803)

3 6 93 இல் அமரத்துவம் அடைந்த கூட்டுறவுப் பெரியார் வைத்திய கலாநிதி

## கதிரவேல் கெங்காதரம்பிள்ளை

அவர்கட்கு

## எமது இதய அஞ்சலி



## நொச்சிமோட்டையில் இறந்த 7பேர் இனம் காணப்பட்டனர்

நொச்சிமோட்டையில் கடந்த வாரம் இடம்பெற்ற மோதலில் சிக்கி பலியான பொதுமக்களில் மேலும் 7பேர் இனம் காணப்பட்டனர்.

கருப்பையா ராசலிங்கம் (38)பாலமோட்டை ஓமந்தை, சிவலிங்கம் ஞானேஸ்வரி (33) மன்னம்பிட்டி, வடிவேலு திருநாவுக்கரசு (40) புதுக்குடியிருப்பு கடைக்கன் கருப்பையா (54) ஓமந்தை, சிறிதரன் ரதினேஸ்வரி (39) புளியங்குளம், விநாசித்தம்பி தங்கமுத்து (55) புதுக்குளம், சுப்பிரமணியம் உதயகுமார் (38) மாங்குளம்.

இம்மோதலில் காயமுற்று அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த அம்பிதிச்சான் என்ற இடத்தைச் சேர்ந்த பாலசுந்தரம் சிவபாக்கியம் 52) என்பவரும் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

## கேள்வி அறிவித்தல்

கல்வித் திணைக்களம் – யாழ்ப்பாணம்

**யாழ். பிரதேச கல்வித் திணைக்களத்திற்குத் தேவையான தளபாடங்கள்**

வழங்கலும், விநியோகித்தலும்

01. யாழ்.கல்வித் திணைக்களத்திற்கும்,அதன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கோட்டக் கல்வி அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றிற்கும் தேவையான கீழ்க் காணப்படும் தளபாடங்களை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்கும் முத்திரையிடப்பட்ட கேள்விகள் தளபாட விநியோகஸ்தர்களிடமிருந்து 1993. 07. 05ஆம் திகதி காலை 10.00 மணிவரை யாழ். கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

02. கேள்விகள் இத் திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட கேள்விப்படிவத்தில்இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு இத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள்கேள்வி முடிவு நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் 'அலுவலகத் தளபாடங்கள் வழங்குவதற்கும், விநியோகிப்பதற்குமான கேள்விகள்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்வி முடிவு நேரத்தின் பின்னர் கேள்விகள் திறக்கப்படும். அச்சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

03. கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப் படங்கள் ஆகியவற்றை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 200/- மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 250/- ஆக மொத்தம் ரூபா 450/-ஐ இவ்வலுவலகத்தில் செலுத்திப் பெற்ற உரிய பற்றுச் சீட்டினைச் சமர்ப்பித்து (172) 1993 - 06 - 28ஆம் திகதி காலை 10-00 மணிக்கு முன்னர் எமது திணைக்களக் கணக்காளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

தேவையான தளபாடங்கள்

01. மாணவர் உருக்குக் கதிரை
02. மாணவர் உருக்கு மேசை
03. பாலர் உருக்குக் கதிரை
04. பாலர் உருக்கு மேசை
05. பரிசோதனைக் கூட ஸ்ரூல்
06. கரும்பலகை தாங்கியுடன்
07. அலுவலக மேசை (சிறியது)
08. அலுவலக மேசை (பெரியது)
09. ஆசிரியர் கதிரை
10. தட்டெழுத்தாளர் மேசை
11. தட்டெழுத்தாளர் கதிரை
12. சிறுவர்களுக்கான இணைப்பு வாங்கு
13 ஆசிரியர் மேசை
14. உருக்கு அலுமாரி
15. மகாநாட்டறை மேசை

யாழ் / பிரதேச கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## பொதுப்பட்டமளிப்பு
## 1993-09-11

டிப்ளோமாக்கள்/பட்டங்கள்/ பட்டப்பின்டிப்ளோமாக்கள்/ முதுமாணி/ கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 1993.09.11 யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொதுப்பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் 93-07-15க்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

01 கலாநிதித் தேர்வு
02. முது தத்துவமாணித் தேர்வு.
03 முது கலை மாணித் தேர்வு
04 முது விஞ்ஞான மாணித் தேர்வு.
05. கல்விப் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் தேர்வு - 1991
06. வைத்தியமாணி. சத்திர சிகிச்சை மாணித் தேர்வு - 1991
07. வணிகமாணித் தேர்வு 1991
08. தொழில் நிர்வாக மாணித் தேர்வு 1991
09 சிறப்பு விஞ்ஞான மாணித் தேர்வு 1991
10. சிறப்புக்கலைமாணித். தேர்வு 1991
11. பொது விஞ்ஞான மாணித் தேர்வு 1991
12. பொதுக் கலைமாணித் தேர்வு 1991
13. இசை / நாட்டியக் கலைமணித் தேர்வு 1991
14. சித்த வைத்தியமாணி சத்திரசிகிச்சைமாணித் தேர்வு

வேண்டுகோள்களை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும் வேண்டுகோட் படிவங்களையும், மற்றும் விபரங்களையும் முத்திரை ஒட்டிய 23x10 செ. மீ அளவுடைய சுய முகவரியிட்ட கடித உறையை, உப பதிவாளர்/ தேர்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுக் கிளைக்கு நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்குக் கிடைக்கப் பெறாத வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

சி-6790)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## சித்தமருத்துவப் பிரிவிற்கு 1992/93ம் ஆண்டிற்கான புதியமாணவர்களை அனுமதித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவப் பிரிவிற்கு பி எஸ். எம். எஸ் பட்டமாணிப் படிப்பிற்காக மாணவர்களைச் சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

[அ] 1989, 1990, 1991 ஆகஸ்ட் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

[ஆ] 1993ஆம் ஆண்டு யூன் 30ஆம் திகதியன்று 17 வயதிற்கு குறையாதவராக இருக்கவேண்டும்.

30. 06. 1993இல் மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகள் யாவுமுடையவராக இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்டவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதிபற்றிய விபரங்களும், விண்ணப்பப் பத்திரமும் யாழ். பல்கலைக்கழகத்தில் சிறாப்பரின் கருமபீடத்தில் ரூபா 20/- செலுத்தி அல்லது நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு ரூபா 20/-க்கான காசுக்கட்டளை ஒன்றினைப் பெற்று அத்துடன் உங்கள் முகவரியிடப்பட்டு. முத்திரை ஒட்டிய உறை ஒன்றினை அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித்திகதி 30. 06. 1993.

—பதிவாளர்

சி-6791)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை

## பட்டப்பின் படிப்பிற்குப் பதிவு செய்தல் – 1993
## (கலாநிதி, முதுமெய்யியல்மாணி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 1992/93ஆம் கல்வியாண்டில் பின்வரும் பாட நெறிகட்கு, பட்டப்பின் படிப்பிற்காகத் தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், கல்வியியல், புவியியல், இந்துநாகரிகம், அரசியல், கிறிஸ்தவ நாகரிகம் வரலாறு வர்த்தகம், தமிழ், மெய்யியல், சமஸ்கிருதம், மொழியியல் நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சித்தமருத்துவம்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பங்களை நேரில் பெற விரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக்கிளை, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் ''நிதியாளர் யாழ் பல்கலைக்கழகம்'' என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 10/- இற்கான காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் ரூபா 8/- பெறுமதியுள்ள முத்திரை ஒட்டிச் சுயவிலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 1993- 07- 10ஆம் திகதிக்கு முன்பாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்வி வெளியீட்டுக் கிளை, யாழ் பல்கலைக் கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். 1993- 07- 10ஆம் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.


பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்
7. 6. 1993 (சி-6801)

---

கதிரவேல்
கெங்காதரம்பிள்ளை
அவர்கட்கு

## எமது இதய அஞ்சலி



[வலிகாமம் மேற்கு, சங்கானையில் கூட்டுறவிற்கெனப் பாரிய விருட்சமாக வலி - மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தை நிறுவி அங்கத்தவர் தொடக்கம் பணியாளர் வரை பயன் பெறத்தக்க வகையில் அரும்பெரும் சாதனை படைத்து அமரத்துவம் அடைந்துவிட்ட கூட்டுறவு வித்தகர் உயர்திரு. கதிரவேல் கெங்காதரம்பிள்ளை அவர்களுக்கு எமது இதய அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்'

10 6. 93 (இன்று) வியாழக்கிழமை பி. ப. 2 00 மணிக்கு அவர் இல்லத்தில் இடம்பெறும் இறுதிக் கிரியைகளிலும் அன்னாரது பூதவுடல் வழுக்கியாறு மயானத்தில் தகனம் செய்யப்படும் நிகழ்ச்சியிலும் கூட்டுறவாளர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.
(5114) சங்கானை ப. நோ. கூ. சங்கம்

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
03.03.1971

ஆண்டவன் அடியில்
10.06.1992



செல்வன்
**சி. சுஜிந்திரன் [முகுந்தன்]**
[G. C. E. (A/L) மாணவன் -1990]

உங்கள் பிரிவால் துயருறும்
பப்பா, மம்மி, தம்பிமார், தங்கை,
அம்மம்மா, அன்ராமார், மாமாமார்,
சித்தப்பாமார் மற்றும் நண்பர்கள்.

''திருமகள் வாசா''
வட்டுக்கோட்டை, அல்வாய் கிழக்கு. (5039)

---

மாக ரூபா 200/- மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 250/- ஆக மொத்தம் ரூபா 450/-ஐ இவ்வலுவலகத்தில் செலுத்திப் பெற்ற உரிய பற்றுச் சீட்டினைச் சமர்ப்பித்து (172) 1993 - 06 - 28ஆம் திகதி காலை 10-00 மணிக்கு முன்னர் எமது திணைக்களக் கணக்காளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

தேவையான தளபாடங்கள்

01. மாணவர் உருக்குக் கதிரை
02. மாணவர் உருக்கு மேசை
03. பாலர் உருக்குக் கதிரை
04. பாலர் உருக்கு மேசை
05. பரிசோதனைக் கூட ஸ்ரூல்
06. கரும்பலகை தாங்கியுடன்
07. அலுவலக மேசை (சிறியது)
08. அலுவலக மேசை (பெரியது)
09. ஆசிரியர் கதிரை
10. தட்டெழுத்தாளர் மேசை
11. தட்டெழுத்தாளர் கதிரை
12. சிறுவர்களுக்கான இணைப்பு வாங்கு
13 ஆசிரியர் மேசை
14. உருக்கு அலுமாரி
15. மகாநாட்டறை மேசை

யாழ் / பிரதேச கல்விப் பணிப்பாளர்

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம், [சி-6805]
1993-06-08.

---

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-06-10

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சியில் சுட்டுக் கொல்லப்பட்ட வைத்திய கலாநிதி.

1986ஆம் ஆண்டு யாழ் குருநகரிலிருந்து 'தூயஒளி' படகில் தொழிலுக்குச் சென்றபோது, சிறிலங்கா கறுப்புச் சட்டை இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 34 கடற்றொழிலாளர்கள்.

தமிழீழக் கடற்பரப்பிலிருந்து வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கி சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இணைப்பாறிய பாடசாலை அதிபர்.

1987ஆம் ஆண்டு மயிலவெவவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

கப்டன் ரமேஸ் [கனகசபை செல்வரத்தினம் - திரியாய் - திருமலை]

1989ஆம் ஆண்டு மந்திகை, முகமாலைப் பகுதிகளில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மட்டுநகர் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட மாவடிவேம்பைச் சேர்ந்த தமிழப் பொதுமகன்.

1992ஆம் ஆண்டு மட்டு - கரவெட்டி, தில்லன்தோட்டம் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். தமிழீழன் /பயஸ் [சிவசம்பு பிரான்சிஸ் - வீச்சுக்கல்முனை - மட்டு.]

வலிகாமம் பகுதியில் பல பாகங்களிலும் குடியிருப்பு மீது அகோர விமானக் குண்டுவீச்சில் துர்க்கையம்மன் ஆலயத்தின் தென்புறத்தே உள்ள தமது வீட்டில் பலியான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இளம் பெண், தாய், தந்தை, மருமகன் ஆகிய 4 பேர், சண்டிலிப்பாயில் தனது வீட்டில் பலியான ஒரு பெண், மாகியப்பிட்டியில் தத்தமது வீடுகளில் பலியான சிறுவன், இளம் பெண் 2 பேர் உட்பட கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6799)

சிந்தனைக்கு

விளக்கு ஒளி வீசட்டும். ஏனெனில் இருட்டில் வீடு திரும்புவதற்கு விரும்பவில்லை.

— ஓ ஹென்றி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## மனம் மாற வேண்டும்

இனப் பிரச்சினைக்கு ஒரு சமாதான தீர்வொன்றைக் காணவேண்டும் என இலங்கையைச் சேர்ந்தவர்களும், வெளிநாட்டைச் சேர்ந்தவர்களும் பல முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இதில் ஒவ்வொரு குழுவினரும் வெவ்வேறு மட்டத்தில் முயற்சிகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

இம்முயற்சியின் பலனாக கடந்த ஆண்டில் பல்வேறு சமாதானக் குழுக்கள் வடபகுதி வந்து சென்றன. அதேபோல், இவ்வாறுடமும் சமாதானக் குழுக்கள் முயற்சியில் ஈடுபட்டுவருவதாக அறிய முடிகின்றது. சில குழுக்கள் இதுவரையில் யாழ்ப்பாணம் வந்துள்ளன. மேலும் பல குழுக்கள் இவ்வருட முடிவிற்குள் வந்து போகலாம் எனத் தெரிய வருகின்றது.

இதேவேளை, தமிழ் மக்கள் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்று ஏற்படுவதையே விரும்புகின்றனர். வந்துபோன சகல சமாதானக் குழுவிடமும் இதனை அவர்கள் வலியுறுத்தியும் உள்ளனர். அத்தோடு, விடுதலைப்புலிகள் இயக்கமும், கடந்த ஒன்றரை வருடத்திற்கு மேலாக இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வுகாண அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக தொடர்ச்சியாக அறிவித்தும் வந்துள்ளது. அதேவேளை, சமாதானத்திற்கான முன்முயற்சியாக சமாதான முயற்சிகளை மேற்கொண்டு வடக்கே வந்தவர்களைச் சந்தித்து தமது சமாதானம் குறித்த விருப்பத்தையும், அதற்கான நல்லெண்ண சமிக்கைகளையும் வெளிக்காட்டியுள்ளனர்.

ஆனால், அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வுகாண்பதில் நாட்டம் கொள்வதாகத் தெரியவில்லை. இராணுவத்தை பலப்படுத்துவதிலும் போர் ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதிலுமே அக்கறை காட்டியது. மேலும், சமாதான முயற்சிகளை மேற்கொண்டவர்களைக் கௌரவிக்கவுமில்லை. கடந்த வருடத்தில், அமரபுர நிக்காய வண. பலப்பிட்டிய சிறிசிட்டாதிய மகா நாயக்கதேரோ தலைமையிலான பௌத்தகுருமார்களின் குழு ஒன்றும், இவ்வருடத்தில் அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தலைமையிலான

## வெள்ள நிவாரணத்தில் மலையகமக்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

அண்மையில் தென்பகுதி மற்றும் மலையகப் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்ட போது மலையக மக்கள் இதில் புறக்கணிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மலையக மக்கள் புறக்கணிக்கப்பட்டது குறித்து அதிகாரிகளிடம் அமைச்சர் செல்லச்சாமி விளக்கம் கேட்ட போது அவர்கள் ஆச்சரியம் தரும் வகையிலான பதிலை அளித்தனராம்.

''தோட்டத் தொழிலாளர்கள் மலைப்பாங்கான இடங்களில் வாழ்கின்றனர். அங்கு வெள்ளம் நிற்காது. மலை [illegible] வெள்ளம் ஏற்பட்டு பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே தான் இவர்களுக்கு நிவாரணம் வழங்கினோம். மலையில் வாழ்பவர்களுக்கு வழங்கவில்லை'' என அதிகாரிகள் பதிலளித்தனராம்.

## நிதியுதவி கிடைத்ததும் பணிகள் ஆரம்பமாகும்!

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து நிதியுதவி கிடைத்ததும் வடக்கு கிழக்கில் சர்வோதய அமைப்பின் பணிகள் மீள ஆரம்பிக்கும் என இவ்வமைப்பின் தலைவர் கலாநிதி ஆரியரட்ன கொழும்பில் தெரிவித்தார்.

1990இல் அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவினால் அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஆராய ஜனாதிபதி விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டதையடுத்து சர்வோதயத்திற்கான வெளிநாட்டு நிதியுதவிகள் குறைக்கப்பட்டன.

கனடா, நெதர்லாந்து என்பன வடக்கு கிழக்கு மாகாணத்திற்கென வழங்கிவந்த நிதியுதவிகளை நிறுத்திக் கொண்டன. ஜேர்மன் அரசு வழங்க முன்வந்த பெரும் நிதியுதவியையும் நிதியமைச்சு தலையிட்டு நிறுத்திவிட்டது குறிப்பிடத்தக்கது.

பிரேமா கொலை தொடர்பு

## சந்தேக நபர்களின் வங்கிக் கணக்கு ஆராய்வு

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட முன்னாள் ஜனாதிபதியின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள இரு சந்தேக நபர்களின் ஐந்து வங்கிக் கணக்குகள் தொடர்பாக இரகசியப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களில் ஒருவர் பால் வியாபாரம் செய்து பதினையாயிரம் ரூபாய்வரை வருமானமாகப் பெற்றுள்ளார் எனவும் கொழும்பில் ஒரு காணியை சமீபத்தில் கொள்வனவு செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பொருள்களை எடுத்துச் சென்றதின் மூலம் நான்கு லொறிகளிலும் ஒரு பயணத்துக்கு சுமார் 80 ஆயிரம் ரூபா வரை வருமானம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ. ஐ. தே. மு. உறுப்பினருக்கு கொலை மிரட்டல்

(கொழும்பு)

தென் மாகாண சபையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர் ஒருவருக்கு இனந்தெரியாதோரால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தென்மாகாண ஆளுநரிடம் புகார் செய்யப்பட்டுள்ளதாக ''திவயின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தென் மாகாண சபை உறுப்பினர் அநுரகரிக்க ரயிட்டர் திலகசேகரவுக்கே கொலைப் பயமுறுத்தல் விடுக்

இக்கொலை மிரட்டல் தொடர்பாக இவர் கடந்த 26ஆம் திகதி ஆளுநர் பாக்கீர் மரிக்காரைச் சந்தித்த போது தமது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய விதத்தில் சில மிரட்டல்கள் வந்துள்ளதாகவும், இது தொடர்பாக பொலிசாரிடம் தான் முறையிட்டபோதும் மிரட்டல் தொடர்வதாக தெரிவித்தார்.

இவரின் வேண்டுகோளைத் தொடர்ந்து இவருக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு ஆளுநர் உத்தரவு பிறப்

# நெருக்கடி கால யாழ்-வன்னி தொடர்பு சேவை

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்கும் இடையே போக்குவரத்து சீரின்மையைக் கருத்தில் கொண்டு இச்சேவை செயலகங்கள் யாழ்நகரில் மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்திற்கு அண்மையிலும் (முன்னைய காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு அண்மையில் உள்ள கட்டிடத்தில்), கிளிநொச்சியில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குஅண்மையில் உள்ள கட்டிடத்திலும் தகவல் கையேற்கும் கருமபீடம், ஓமந்தை சோதனை நிலையத்திலும் வாரத்தில் ஏழுநாட்கள் காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-30 மணிவரையும் மாலை 1-30 மணி தொடக்கம் 5-00 மணிவரையும் நடைபெற்று வருகின்றது.

இச் செயலகத்தால் தகவல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் போது சலுகை அடிப்படையில் அமைந்த தகவல்கள் வியாபார நோக்கத்தின் அடிப்படையில் அமைந்த தகவல்கள் எனவும், இவை இரண்டுள்ளும் அடங்காத தகவல்களும் வழமையான தகவல்களாக கொள்ளப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும்.

பாரதூரமான நோய்வாய்ப்பட்டிருக்கும் செய்திகளும், மரண அறிவித்தல் செய்திகளும் குறிப்பிட்ட மாவட்ட வைத்திய அதிகாரியினால் அல்லது பிரதேச சிற்றூர் பொறுப்பாளர் அல்லது கிராம சேவகர் உறுதிப்படுத்தப்பட்டிருப்பின் இத்தகவல் சலுகை அடிப்படையில் அமைந்த தகவல்களாகக் கொள்ளப்படும். 15ற்கு மேற்படாத சொற்களுக்குரூபா 15-ம் மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 2-ம் அறவிடப்படும்.

தத்தமது வியாபார நோக்கத்திற்கான தகவல்களும் கையளிப்போரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும். தகவல்கள் வியாபாரத் தகவல்கள் என்ற அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படும்போது முதல் 10 சொற்களுக்கும் ரூபா100-ம் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 15-ம் கட்டணமாக அறவிடப்படும். சலுகை அடிப்படையிலான தகவல்களிற்குள்ளும் வியாபார நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட தகவல்களிற்குள்ளும் அடங்காத மற்றைய வழமையான தகவலிற்கு முதல் 10 வரையிலான சொற்களுக்கு ரூபா 50-ம் மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5-ம் கட்டணமாக அறவிடப்படும்.

மற்றும் தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 72 மணி நேர இடைவெளிக்குள் விநியோகிக்கப்படும். தகவல்கள் சாதாரண கட்டண விநியோகங்களாக எடுத்துக் கொள்ளப்படும். தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 24 மணி நேர இடைவெளியில் விநியோகிக்கப்படும் தகவல்கள் விரைவு விநியோகமாகக்கொள்ளப்படும். விரைவு விநியோகத்திற்கு, சாதாரண விநியோகத்திற்கான கட்டணத்துடன் மேலதிகமாக 500 ரூபா அறவிடப்படும்.

வன்னிப் பகுதி விநியோகங்கள் கண்டிவீதியை மையமாக வைத்தே விநியோகிக்கப்படும். கிளிநொச்சி நகரத்திலிருந்து 3மைல்கள்சுற்றுவட்டாரத்தில் உள்ள பகுதிகளுக்கும் குஞ்சுப்பரந்தன் இறங்குதுறை பகுதிக்கும் விநியோகங்கள் மேற் மேற்கொள்ளப்படும்.

தொடர்பு தகவல்களை கையளிப்போர் அதற்கென உள்ள படிவங்களை சரியான முறையில் பூர்த்திசெய்து அலுவலக நேரத்தில் ஒப்படைத்து இச்சேவை மூலம் பொது மக்கள் பயன்பெறும் நோக்குடன் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு இத்தகவலை அறியத்தருகிறது.

## 'அரசியல் வேண்டாம் என குழந்தைகள் கூறுவார்கள்'

மேல்மாகாண முதல்வர்

நான் சிறுமியாக இருக்கும் போது தந்தை எம் வீட்டில் வைத்தே படுகொலை செய்யப்பட்டார். என் கண் முன்னே எனது பிள்ளைகளின் முன்னே எனது கணவர் கொடூரமாகக் கொல்லப்பட்டார். இரவில் நான் நேரம் கழித்து வீட்டுக்கு செல்லும் போதெல்லாம் எனது குழந்தைகள் உறங்காமல் இருந்து ''அம்மா அரசியலுக்குபோகாதீர்கள் உங்களையும் சுட்டு விடுவார்கள்'' என்று அழுதழுது கூறுவார்கள். இவ்வாறு மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க விடுத்த பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இவையெல்லாம் இந்த நாட்டில் தலைவிரித்தாடும் பயங்கரமான அரசியலைக் காட்டுகின்றன. இவற்றிலிருந்து நாம் விடுபடவேண்டும். படுகொலைகள் நிறைந்த அரசியலை துடைத்தெறிய வேண்டும். புதிய ஓர் அரசு அமைய வேண்டும் என்றும் அவரின் பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு

யாழ் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடாத்தும் கரபந்தாட்ட செற் அப் அரையிறுதிப் போட்டிகள் ஐங்கரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 6.30 மணியளவில் இடம் பெறும். கே. கே. எஸ் விளையாட்டுக்கழகம் பாரதி வி. கழகத்துடன் மோதும். மற்றும் ஒரு போட்டியில் ஆவரங்கால் வி. கழகம் பாரதி வி. கழகத்துடன் மோதும்.

இதில் வெற்றிபெறும்கழகங்கள் நாளை இறுதிப்போட்டியில் மோதும். (42)

★ ★

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிகள் யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி விளையாட்டுத் திடலில் இன்று வியாழன் பி. ப, 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தில். நாளைய தினம் உதைப் பந்தாட்ட இறுதிப் போட்டி பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது. இப் போட்டியின் போது வல்வெட்டித்துறை ஆதிசக்தியை எதிர்த்து வதிரி டயமன்ட் கழகம் மோத

## நியமனம்

சிறிலங்காவின் போரூட் நிறுவனத்தின் புதிய வதிவிடப் பிரதிநிதியாக சுவீடன் நாட்டைச் சேர்ந்த திரு. லைவ் நைபல்நியமனம் பெற்றுள்ளா

இவர் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து தனது புதிய பதவியை பாரமேற்றுள்ளார். முன்னர் இருந்துவந்த வதிவிடப் பிரதிநிதி திரு. போல் ஹென்றி வீலன் இம்மாதம் முதல் தனது சேவையை முடிக்

இயக்கமும், கடந்த ஒன்றரை வருடத்திற்கு மேலாக இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வுகாண அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக தொடர்ச்சியாக அறிவித்தும் வந்துள்ளது. அதேவேளை, சமாதானத்திற்கான முன்முயற்சியாக சமாதான முயற்சிகளை மேற்கொண்டு வடக்கே வந்தவர்களைச் சந்தித்து தமது சமாதானம் குறித்த விருப்பத்தையும், அதற்கான நல்லெண்ண சமிக்கைகளையும் வெளிக்காட்டியுள்ளனர்.

ஆனால், அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வுகாண்பதில் நாட்டம் கொள்வதாகத் தெரியவில்லை. இராணுவத்தை பலப்படுத்துவதிலும் போர் ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதிலுமே அக்கறை காட்டியது. மேலும், சமாதான முயற்சிகளை மேற்கொண்டவர்களைக் கௌரவிக்கவுமில்லை. கடந்த வருடத்தில், அமரபுர நிக்காய வண. பலப்பிட்டிய சிறிசிட்டாதிய மகா நாயக்கதேரோ தலைமையிலான பௌத்தகுருமார்களின் குழு ஒன்றும், இவ்வருடத்தில் அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தலைமையிலான தூதுக்குழுவொன்றும்சமாதானமுயற்சிகளில் ஈடுபட்டன. அவர்களிடம் விடுதலைப்புலிகள் எவ்வளவோ நல்லெண்ண சமிக்கைகளை காட்டியபோதும் சிறிலங்கா அரசாங்கம் அதில் எதுவித அக்கறையும் காட்டவில்லை. சமாதான முயற்சியில் ஈடுபட்ட இக்குழுக்களை சம்பிரதாய பூர்வமாகவேனும் ஜனாதிபதி பிரேமதாசா சந்திக்கவில்லை.

இந்நிலையானது இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில், தமிழ் மக்களும், விடுதலைப்புலிகளும் கொண்டுள்ள ஆர்வத்திலும் அக்கறையிலும் ஒரு சிறு அளவு தானும் சிங்கள அரசியல்வாதிகளும் சரி, சிங்கள மக்களும் சரி கொண்டிருக்கவில்லை என்பதையே காட்டுகின்றது. இனவாதமே அவர்களின் அரசியலாகிவிட்ட நிலையில், சமாதானத் தீர்விற்கு சிங்கள அரசியல்வாதிகளே பெரும் முட்டுக்கட்டையாக உள்ளனர்.

மேலும், இன்று இடம் பெறும் போரானது தமிழர்கள் மீது திணிக்கப்பட்டதொன்றாகும். சிங்களப் பேரினவாதம் தமிழர் மீது கட்டவிழ்த்து விட்ட அடக்குமுறைக்கு எதிராக தமது பாதுகாப்பிற்காகவும், சுதந்திரமான வாழ்விற்காகவும் தமிழரால் மேற்கொள்ளப்படும் ஒரு போராகும். அதாவது, பெரும்பான்மை இனம் கட்டவிழ்த்துவிட்ட ஒடுக்குமுறையில் இருந்து தம்மை தற்காத்துக் கொள்வதற்கான தற்காப்பு போராகும்.

இந்நிலையில், தமிழர்கள் சிங்கள அரசாங்கத்திற்கு எதிராகப் போரை நடத்துகின்றார்கள் என்றோ, சமாதானத்திற்கு முட்டுக்கட்டையாக உள்ளனர் என்றோ எவராவது கருதினால் அது தவறாகும். ஆனால், தமிழர்கள் இன்று தமது உரிமைக்காக நடத்தும்போரை. உரிமைகள் எதுவுமின்றி சமாதானம் என்ற ரீதியில் கைவிடுதல் என்பது தமிழ் மக்கள் சரணாகதி அடைவதாக இருக்குமே ஒழிய ஒருபோதும் சமாதானமாக இருக்கமாட்டாது. ஏனெனில். தமிழர்களின் உரிமைகளை சிங்களப் பேரினவாதிகள் மதித்து நடக்க கூடியவர்களாக இருந்திருப்பின் இப்போரே இன்று நடந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

ஆகையினால், சமாதான முயற்சியில் ஈடுபடுபவர்கள் யாராக இருப்பினும், தமிழர்களின் சமாதானம் குறித்த நிலையை சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். தமிழ்மக்கள் தமது பாதுகாப்புடன் கூடிய ஒரு சமாதானத்தை எப்பொழுதுமே விரும்புகின்றனர். இந்நிலையில், சமாதானம் குறித்த விருப்பமும், மனமாற்றமும் சிங்களவர் மத்தியிலேயே குறிப்பாக சிங்களப் பேரினவாதிகளிடமே ஏற்படவேண்டும். அவர்கள் மனங்களே சமாதானம் நோக்கி மாற்றப்பட வேண்டும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளுதலே சமாதானத்திற்கான அடித்தளமாக அமையும்.

---

...ம்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களில் ஒருவர் பால் வியாபாரம் செய்து பதி... நான்கு லொறிகளிலும் ஒரு பயணத்துக்கு சுமார் 80 ஆயிரம் ரூபா வரை வருமானம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ. ஐ. தே. மு. உறுப்பினருக்கு கொலை மிரட்டல்

(கொழும்பு)

தென் மாகாண சபையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர் ஒருவருக்கு இனந்தெரியாதோரால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தென்மாகாண ஆளுநரிடம் புகார் செய்யப்பட்டுள்ளதாக ''திவயின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தென் மாகாண சபை உறுப்பினர் அநுராகரிக்க ரயிட்டர் திலகசேகரவுக்கே கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இக்கொலை மிரட்டல் தொடர்பாக இவர் கடந்த 26 ஆம் திகதி ஆளுநர் பாக்கீர் மாக்காரைச் சந்தித்த போது தமது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய விதத்தில் சில மிரட்டல்கள் வந்துள்ளதாகவும், இது தொடர்பாக பொலிசாரிடம் தான் முறையிட்டபோதும் மிரட்டல் தொடர்வதாக தெரிவித்தார்.

இவரின் வேண்டுகோளைத் தொடர்ந்து இவருக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு ஆளுநர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

---

...அடிப்படையில் அமைந்த தகவல்களாகக் கொள்ளப்படும். 15ற்கு மேற்படாத சொற்களுக்குரூபா 15-ம் மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 2-ம் அறவிடப்படும்.

தத்தமது வியாபார நோக்கத்திற்கான தகவல்களும் கையளிப்போரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும். தகவல்கள் வியாபாரத் தகவல்கள் என்ற அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படும்போது முதல் 10 சொற்களுக்கும் ரூபா 100-ம் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 15-ம் கட்டணமாக அறவிடப்படும். சலுகை அடிப்படையிலான தகவல்களிற்குள்ளும் வியாபார நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட தகவல்களிற்குள்ளும் அடங்காத மற்றைய வழமையான தகவலிற்கு முதல் 10 வரையிலான சொற்களுக்கு ரூபா 50-ம் மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா

---

...ஒரு போட்டியில் ஆவரங்கால் வி. கழகம் பாரதி வி. கழகத்துடன் மோதும்.

இதில் வெற்றிபெறும்கழகங்கள் நாளை இறுதிப்போட்டியில் மோதும். (42)

★ ★

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிகள் யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி விளையாட்டுத் திடலில் இன்று வியாழன் பி. ப, 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தில் நாளைய தினம் உதைப் பந்தாட்ட இறுதிப் போட்டி பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது. இப் போட்டியின் போது வல்வெட்டித்துறை ஆதிசக்தியை எதிர்த்து வதிரி டயமன்ட் கழகம் மோதவுள்ளது. [யோ]

---

...நாட்டில் தலைவிரித்தாடும் பயங்கரமான அரசியலைக் காட்டுகின்றன. இவற்றிலிருந்து நாம் விடுபடவேண்டும். படுகொலைகள் நிறைந்த அரசியலை துடைத்தெறிய வேண்டும். புதிய ஓர் அரசு அமைய வேண்டும் என்றும் அவரின் பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நியமனம்

சிறிலங்காவின் போரூட் நிறுவனத்தின் புதிய வதிவிடப் பிரதிநிதியாக சுவீடன் நாட்டைச் சேர்ந்த திரு. லைவ் நைபல்நியமனம் பெற்றுள்ளா

இவர் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து தனது புதிய பதவியை பாரமேற்றுள்ளார். முன்னர் இருந்துவந்த வதிவிடப் பிரதிநிதி திரு. போல் ஹென்றி வீலன் இம்மாதம் முதல் தனது சேவையை முடித்துள்ளார். (யோ)

---

# வீரப்பனை பிடிக்க இரவு ஊரடங்கு

## தேடுதல் ஆரம்பம்

(மைசூர்)

வீரப்பனை பிடிக்க கர்நாடகம் மைசூர் பகுதிக்கு வந்த எல்லைப் பாதுகாப்புப்படையினர் நேற்று முன்தினம் தமது தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். இத்தேடுதல் பணிகுறித்து படையினருக்கு விளக்கமளிக்கப்பட்டிருப்பதோடு போதுமான ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேடுதலுக்கு உதவியாக கொள்ளேகல பகுதியில் நேற்று முன்தினமிரவு முதல் இரவுநேர ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. இந்த இரவுநேர ஊரடங்கு இம்மாதம் 20ஆம் திகதிவரை நீடிக்கும். இப்பகுதியில் வாகனங்கள் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வீரப்பனை தேடும் பணியின்போது கைது செய்யப்பட்ட தமது சுடும் பத்தினரை விடுவிக்குமாறு கோரி, குளத்தூர், சண்டாளம், கோளவூர் மற்றும் அருகிலுள்ள கிராமங்களைச்சேர்ந்த சுமார் 100 பேர் நேற்று முன்தினம் மேட்டூரில் அரச அதிபர் அலுவலகம் முன் உண்ணாவிரதம் இருந்தனர்.

வீரப்பனுக்கு உணவு மற்றும் ஆயுதங்கள் வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் மேலும் இருவர் கடந்த இரு தினங்களில் சிறப்புக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## புலி ஆதரவுக் கோஷங்கள்; பொய்யான வழக்குப் பதிவு

—இராமதாஸ் கண்டனம்

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் விடுதலைப் புலிகளுக்குஆதரவாகக் கோஷங்கள் எழுப்பியதாகப் பொய் வழக்குகளைப்பதிவுசெய்யமுதலமைச்சர் ஜெயலலிதா மாநிலப் பொலிசாரின் உதவியுடன் சூழ்ச்சிசெய்வதாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் எஸ். இராமதாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சமீபத்தில் சேலத்தில்நடந்த கட்சியின் மாநாட்டில் இப்படியான கோஷங்களை எழுப்பியதாகக் கூறி 31 பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் கைதுசெய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார். விடுதலைப்புலிகள் குறித்து ஜெயலலிதாமீது மத்திய அரசு குற்றஞ்சாட்டிய குற்றச்சாட்டுக்களில் இருந்து கவனத்தைத் திசை திருப்பவே ஜெயலலிதா இப்படி நடந்து கொள்கின்றாரென்றும் இராமதாஸ் கூறினார்.

---

## 142 பேர் உயிரிழப்பு

(ஜகார்த்தா)

முஸ்லிம்களின் புனித நகரமான மெக்காவுக்கு ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக சென்ற இந்தோனேசியப் பயணிகளில் சுமார் 142 பேர் உயிரிழந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசிய மத விவகார அமைச்சு இது தொடர்பாக மேலும் கூறுகையில், அதிகவெப்பம், இருதய நோய் மற்றும் நெரிசல் என்பனவற்றினாலேயே இவர்களின் மரணம் சம்பவித்திருப்பதாக கூறியுள்ளது.

## மைசூரில் அறுவர் கைது

(சென்னை)

கர்நாடக மாநிலத்தின் மைசூர் மாவட்டத்தில் இருக்கும் கொள்ளேகல தாலுகா பகுதியிலும் அதனைச் சூழவுள்ள பகுதியிலுமிருந்து சந்தன மரக் கடத்தல் காரன் வீரப்பனுக்கு உதவுவதாகச் சந்தேகிக்கப்படும் ஆறு பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களையும் சேர்த்து இதுவரையில் வீரப்பன் குழுவைச் சேர்ந்தோர் எனக் கூறப்பட்டு பதினேழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## அதிபர்ஹோல்கொலையாளி; ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம்

[பேர்லின்]

ஜேர்மன் சான்ஸ்லர் ஹெல்மெட்ஹோல் பேர்லின் நகரில் மாதா கோயில் வைபவம் ஒன்றில் கலந்து கொள்ள வந்த போது நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கோயிலுக்கு வெளியில் நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஐந்து துருக்கியர்கள் கொலை செய்யப்பட்டது தொடர்பாக கடந்த வாரம் நடைபெற்ற ஆராதனையில் ஹெல்மெட் ஹோல் கலந்து கொள்ளாததைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாகைகளைத் தாங்கியவண்ணம் ''ஹெல்மெட் ஹோல் ஒரு கொலையாளி'' என்று கோஷமிட்டனர்.

---

## பொலிசாரால் கைதானவர் காவலில் மரணம்

(சென்னை)

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் விசாரணைக்கென பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்ட இருவரில் ஒருவர் மரணமடைந்தது தொடர்பாக மக்கள் காவல் நிலையத்தின் முன்பு திரண்டு பெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் பொலிசார் தடியடி நடத்திக் கலைத்தனர் எனவும், போக்குவரத்து வாகனங்கள் மாற்றுப் பாதையில் திருப்பிவிடப்பட்டது எனவும், அப் பகுதிக் கடைகள் யாவும் மூடப்பட்டது எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இவரது மரணம் வலிப்பினால் ஏற்பட்டது எனவும், இது தொடர்பாக இரு பொலிசார் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு இருப்பதாகவும் மாவட்ட காவல்துறை ஆணையாளர் கூறியுள்ளார்.

## சாயிபாபா கொலை முயற்சி சூத்திரதாரி தேடப்படுகிறார்

(டில்லி)

சத்திய சாயிபாபாவின் கொலை முயற்சிக்குக் காரணமான சூத்திரதாரியை பொலிசார் தேடிவருகின்றனர். ஞாயிறன்று இரவு சாயிபாபாவை கொல்ல முயற்சித்த நான்கு இளைஞர்களில் ஒருவரின் சகோதரரே இச்சதித்திட்டத்திற்கு பின்னால் உள்ள நபர் என நம்பப்படுவதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பாபாகொலைமுயற்சிகுறித்து பிரதமர் ராவ் அதிர்ச்சி

புட்டபர்த்தியில் நேற்றுமுன்தினம் சத்யசாயி பாபாவைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி குறித்து இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் பெரும் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

சத்யசாயி உலகசேவைஅறக்கட்டளையின் தலைவர்கேணல் யோக்காராவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய பிரதமர் மேலும் பாபாவின் சுகநலம் குறித்து விசாரித்து அறிந்து கொண்டார். தற்போது உதகமண்டலத்தில் தங்கியிருக்கும் தமிழக ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டியும் பாபாவின் சுக செய்தி குறித்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

ஈழநாதம்

## மெய்வன்மைப் போட்டியில் யாழ். கோட்டம் முதலிடம்

[நமதுநிருபர்]

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 1993 இற்கான மெய்வன்மைப் போட்டியில் யாழ்ப்பாணக் கோட்டம் மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்று லெப்டினன்ட் கேணல் பொன்னம்மான் நினைவுச் சுற்றுக் கேடயத்தைத் தட்டிச் கொண்டது.

யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடாத்தப்பட்ட மேற்படி மெய்வன்மைப் போட்டியில் யாழ். கோட்டம் 261 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் வடமராட்சிக் கோட்டம் 166 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. மற்றும் பண்டத்தரிப்பு, மருதனார்மடம், சாவகச்சேரி, வேலணைக் கோட்டங்கள் முறையே 144, 76 5, 31.5, 05 புள்ளிகளைப் பெற்றன.

மேற்படிபோட்டியில் கலந்து கொண்ட 15, 17 19 வயதுப் பிரிவு மாணவர்களில் மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற முதன்மை வீரர், முதன்மை வீராங்கனைகளுக்கு வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

நேற்று நண்பகல் 1.30 மணிக்கு யாழ். கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரைதியாகராஜா தலைமையில் ஆரம்பமான மேற்படி நிகழ்வில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க. பொறுப்பாளர் திரு ந. இன்பன் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை திருவாட்டி தேவராணி சுந்தரலிங்கம் வழங்கினார். இம் மெய்வன்மைப் போட்டியில் வடமராட்சிக் கோட்டம் இரண்டாவது இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. முதன்மை வீரர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு:-

15 வயதிற்குட்பட்டோர் பிரிவில் க. சஞ்சயன் (பரியோவான் கல்லூரி), 17 வயது பிரிவில் சே. நிருபன் (புனித பத்திரிசியார் கல்லூரி), ச. சபானந்தன் (ஹாட்லிக் கல்லூரி), 19 வயது பிரிவில் க. பிரதீபன் (ஹாட்லிக் கல்லூரி) ஆகியோர் மிகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்று முதன்மை வீரர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை பரிசாகப் பெற்றனர்.

முதன்மை வீராங்கனைகளுக்கான வெற்றிக் கிண்ணங்களை 15 வயதுப் பிரிவில் வே. ஜெக்தீஸ்வரி (மந்துவில் ஸ்ரீ பார்தி வித்தியாலயம்) வி. விஜயபிரபா (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரும் 17 வயதுப் பிரிவில் இ. சிவகௌரி (புற்றளை ம. வி.), 19 வயது பிரிவில் க. மகநந்தகுமாரி (யாழ். இந்துமகளிர் கல்லூரி) ஆகியோர் தட்டிக் கொண்டனர்.

மேற்படி போட்டியில் பரிசு பெற்றோருக்கு வழங்கப்பட்ட அனைத்து வெற்றிக் கிண்ணங்களும் சுற்றுக் கேடயமும் தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### வீரச்சாவு

அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக்கூட்டம் நடாத்தப்பட்டு அணிவகுப்பு மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### புலிகள்

இவ்வாறு பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டு கொழும்பைவிட்டு எவரும் வெளியேறாதவாறு தடைகள் போடப்பட்டு சுற்றி வளைப்புகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை எந்தவொரு விடுதலைப்புலிப் போராளியும் பொலிசாரால் கைது செய்யப்படவில்லை எனவும் கைது செய்யப்பட்டவர்கள் எவருக்கும் மேற்படி கொலையில் நேரடியான தொடர்புகள் எதுவும் இல்லை என்பது புலனாய்வு பொலிசார் நடாத்திய விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக அவ் அதிகாரி பி. பி. ஸிக்கு தெரிவித்துள்ளார்.

### மருத்துவ

உபகரணங்களை யாழ்ப்பாணம் கொண்டு வர சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தீவிரமுயற்சி எடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

### கொழும்பில்

என்றும் அவர் கூறினார்.

தமிழ் எம். பி. ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் விக்கிரமசிங்க கொழும்பிலுள்ள தமிழர்கள் அனைவரையும் பொலிசார் சந்தேகநபர்களாக கருதவில்லை என்றும் நகரில் சட்டம், ஒழுங்கைப் பேண பொலிசார் நடவடிக்கை எடுக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

எவரும் கைது செய்யப்பட்டால் அது குறித்து உடனடியாக உறவினர்க்கு அறிவிக்க வேண்டும் என பொலிசார் பணிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

அண்மைக்காலமாக கொழும்

முன்னாள் ஜனாதிபதி பிரேமாவின்

# இரகசிய புலனாய்வுக் குழு ஊழலை விசாரிக்கவே

## பாராளுமன்றத்தில் அமைச்சர் பதில்

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ. சி. லோறன்ஸ் தலைமையிலான விசேட பொலிஸ் பிரிவு பல்வேறு அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் அதிகாரிகளின் ஊழல்கள் ஒழுங்கீனங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்டதே என நேற்றுப் பாராளுமன்றத்தில் விளக்கமளித்த பாராளுமன்றவிவகார அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்பு பிரேரணையில் சுதந்திரக்கட்சி எம். பி. நிமால் சிறிபால டி சில்வாவின் கேள்விக்குப் பதிலளித்த போதே. அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். லோறன்ஸ் தலைமையிலான இந்த சர்ச்சைக்குரிய பொலிஸ் பிரிவு ஜனாதிபதி பிரேமதாசாவினால். அமைக்கப்பட்டு அவரின் எதிரிகள் இவ்வமைப்பினால் பழிவாங்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் வெளியானது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தவிசேட பொலிஸ் பிரிவு ஊழல். விரயம் என்பவற்றை தடுக்கவே. அமைக்கப்பட்டதால் இதன் செயற்பாடுகள் குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழுவோ. பாராளுமன்ற விசாரணைக்குழுவோ தேவையில்லை என்றும் அமைச்சர் விமல் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த விசேட பிரிவு கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின்கீழ் வருவதாகக் குறிப்பிட்ட அமைச்சர், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள். அமைச்சுகள் என்பவற்றின் ஊழல்களை நேரடியாகவே விசாரிப்பதுஎன அரசு முடிவுசெய்ததையடுத்து இந்த விசேட பொலிஸ் பிரிவு கலைக்கப்பட்டதாக விளக்கமளித்தார்.

### போர் நிறுத்தத்திற்கு

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், கல்வித் துறைப்பொறுப்பாளர் திரு. இளங்குமரன், காவல்துறைப் பொறுப்பாளர் திரு நடேசன், நீதித்துறைப் பொறுப்பாளர் திரு.பரா, யாழ் மாவட்டத் தளபதி திரு அன்பு, திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் இப் பேச்சு வார்த்தையின் போது விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கு விரோதமானவர்களல்ல. சமாதானத்தையே அவர்களும் விரும்புகின்றார்கள். இச்சமாதானம் நிரந்தர சமாதானமாகவும் தமிழ் மக்களின் பாதுகாப்பு, சுதந்திரம் என்பனவற்றை உறுதி செய்வதாகவும் இருக்க வேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமானால், தமிழர் தாயகம் அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் புலிகள் தரப்பில்கூறப்பட்டது

இதேவேளை, போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளவும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதோடு, இப்போர் நிறுத்தத்திற்கானதும், சமாதானப் பேச்சிற்கான சூழ்நிலை உருவாக்குவதும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதும் அரசாங்கத்தின் பொறுப்பு எனவும், இதற்கான ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, கருத்து வெளியிட்ட வெளிநாட்டு தூதுக்குழுவினர் புலிகளின் நிலைப்பாட்டை அரசாங்கத்திடம் எடுத்து விளக்கி ஒரு

### சர்வதேச

இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக தூதுவராலய வட்டாரங்களையும், அரசு வட்டாரங்களையும் மேற்கோள்காட்டி ராய்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான திட்டங்கள் அடுத்தவாரம் கூடவுள்ள மந்திரிசபையில் முன்வைக்கப்படவுள்ளதாகவும் பாரிசில் நடைபெறவுள்ள சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் எடுக்கப்படும் முடிவினையொட்டியே திட்டங்கள் நடைமுறைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான ஆலோசனையை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவிடமும் சர்தேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்

பரீட்சை முடிவுகள்

## வெளியாகின

சில மாதங்களிற்கு முன்னர் நடாத்தப்பட்ட எழுதுவினைஞர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையின் யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இம்முடிவுகள் நேற்று முன்தினம் குமாரி கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டு யாழ். கல்வித் திணைக்களம் கொண்டுவரப்பட்டு அன்றே தபாலில் சேர்க்கப்பட்டன.இவை ஒரு பகுதி முடிவுகளே என தெரிய வருகின்றது. மிகுதி முடிவுகள் கொழும்பில் தேங்கிக் கிடப்பதாக தெரியவருகின்றது. [பா]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 09-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9773

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-5244, 26 6320, 27-2088, 28-0248, 24 6480, 24-7327, 24-8710, 41-5015, 42-3239, 24-1983, 27-8751, 28-1311 26-2414, 26-7949, 42-6119, 24-5137, 26-3294, 22-5812, 24-8631.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-7272, 42-8316, 40-7299, 26-3528, 27-0849, 26-0691, 27-0089, 40-2780, 24-5955, 24 4205, 24 5437, 40-2782, 27-9305, 28-2504, 26-0514, 42-3419, 41-4719, 41-1531.

சாவகச்சேரி
தெய்வேந்திரா திரை அரங்கில்
முல்லை மாவட்டக் கலைஞர்களின்
முதலாவதுவெற்றிப்படைப்பு
"தமிழோசை"
தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30, மாலை 4 மணி, 6 மணி
(சி/6720)

## மரண அறிவித்தல்கள்

தம்பர் கார்சிப்பிள்ளை
கந்தசாமி

அன்று!
எம் மண்ணின் மைந்தர்களால்
பல சாகஸ செயல்கள் செய்யப்பட்டன.
சாதனைகளை புரிந்தவர்கள் மண்ணின்
மீட்புக்காய் மரணித்துவிட்டார்கள்.
இன்று!

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரைதியாகராஜா தலைமையில் ஆரம்பமான மேற்படி நிகழ்வில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சந்திரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க பொறுப்பாளர் திரு ந. இன்பன் சிறப்பு அதிதியாகக் கல

(புற்றளை ம. வி.), 19 வயது பிரிவில் க. மகநந்தகுமாரி (யாழ். இந்துமகளிர் கல்லூரி) ஆகியோர் தட்டிக் கொண்டனர்.

மேற்படி போட்டியில் பரிசு பெற்றோருக்கு வழங்கப்பட்ட அனைத்து வெற்றிக் கிண்ணங்களும் சுற்றுக் கேடயமும் தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தீவிரமுயற்சி எடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில்

என்றும் அவர் கூறினார்.

தமிழ் எம். பி. ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் விக்கிரமசிங்க கொழும்பிலுள்ள தமிழர்கள் அனைவரையும் பொலிசார் சந்தேகநபர்களாக கருதவில்லை என்றும் நகரில் சட்டம், ஒழுங்கைப் பேண பொலிசார் நடவடிக்கை எடுக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

எவரும் கைது செய்யப்பட்டால் அது குறித்து உடனடியாக உறவினர்க்கு அறிவிக்க வேண்டும் என பொலிசார் பணிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

அண்மைக்காலமாக கொழும்பில் தமிழர்கள் பொலிசாரின் கெடுபிடிக்கு ஆளாகி வருவது தெரிந்ததே.

அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் புலிகள் தரப்பில்கூறப்பட்டது

இதேவேளை, போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளவும் பேச்சு வார்த்தை நடத்துவதற்கும் விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதோடு, இப்போர் நிறுத்தத்திற்கானதும், சமாதானப் பேச்சிற்கான சூழ்நிலை உருவாக்குவதும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதும் அரசாங்கத்தின் பொறுப்பு எனவும், இதற்கான ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, கருத்து வெளியிட்ட வெளிநாட்டு தூதுக்குழுவினர் புலிகளின் நிலைப்பாட்டை அரசாங்கத்திடம் எடுத்து விளக்கி ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்க தாம் முயற்சிப்பதாகத் தெரிவித்தனர்.

## சர்வதேச

இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக தூதுவராலய வட்டாரங்களையும், அரசு வட்டாரங்களையும் மேற்கோள்காட்டி ராய்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான திட்டங்கள் அடுத்தவாரம் கூடவுள்ள மந்திரிசபையில் முன்வைக்கப்படவுள்ளதாகவும் பாரிசில் நடைபெறவுள்ள சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் எடுக்கப்படும் முடிவினையொட்டியே திட்டங்கள் நடைமுறைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான ஆலோசனையை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவிடமும் சர்தேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்பட்டதும் அவற்றை பிரேமதாசா புறக்கணித்தமையும் குறிப்பிடத்தக்கது


# அன்று!

எம் மண்ணின் மைந்தர்களால்
பல சாகஸ செயல்கள் செய்யப்பட்டன.
சாதனைகளை புரிந்தவர்கள் மண்ணின்
மீட்புக்காய் மரணித்துவிட்டார்கள்.

# இன்று!

## சாண்டோ M. துரைரத்தினம்

அவர்களால் பயிற்சி அளிக்கப்பட்ட
பொலிகை மண்ணின் மைந்தர்களால்

**10-6-93 மாலை 5 மணிக்கு**

கழக மைதானத்தில் பல வீர சாதனைகள்
செய்து காண்பிக்க உள்ளனர்

1. இலங்கையில் இதுவரை காலமும் எவரும் சாதிக்காத முள்ளாணி (1/4" தடிப்பு 3" உயரமுள்ள) படுக்கையின் மேல் படுத்திருந்து மார்புமீது உழவு யந்திரத்தை ஏற்றி சாதனை படைக்க உள்ளார் — செ. செல்வராஜா
2. அதிபாரங்கொண்ட லொறி ஒன்றை மார்பில் ஏற்ற உள்ளார் — தங்கேஸ்வரராசா
3. தொண்டைக் குழிக்கு மேலாக ஆட்களுடன்கூடிய கட்டைவண்டி ஒன்றை ஏற்ற உள்ளார் — ப. யோகேந்திரராஜா
4. நெருப்பு புதைகுழியினுள் 45 நிமிடங்கள் — செ. ரஞ்சகுமார்

இச் சாதனை நிகழ்வுகளை கண்டுகளிக்க
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(5118) —பொலிகை மக்கள்



மீண்டும் யாழ்நகரில்
றொலெக்ஸ் ஸ்தாபனத்தாரின்

## தேன் சிந்தும் ஐஸ்கிறீம்

வகைகள்!

ஸ்பெசல் ஐஸ்கிறீம் — புறுட் சலட் ஐஸ்கிறீம்
சொக்லட் ஐஸ்கிறீம் — வனிலா ஐஸ்கிறீம்
மற்றும் சர்பத், கிறீம் சர்பத், ஐஸ் கோப்பி
அனைத்து குளிர்பான, வகைகளுக்கும் சுவைமிகு.
கோழிப்புரியாணி வகைகளுக்கும் மீண்டும்
★ உங்களை அழைக்கின்றார்கள் ★
"ஹொட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தார்"

## ஹொட்டல் றொலெக்ஸ்

840, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/5028)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


# பதவி வெற்றிடம்

**பதவி:** வெளிக்கள உத்தியோகத்தர், தகவல் சேகரிப்பாளர்
**கல்வித்தகைமை:** க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் சித்தி
**வயதெல்லை:** 36 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்
**விண்ணப்ப முடிவுத் திகதி:** 14-06-1993
**அனுப்ப வேண்டிய முகவரி:** தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்
மாவட்டச் செயலகம்,
கோண்டாவில்.

குறிப்பு:
1. யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. விண்ணப்பதாரிகள் அனைவரும் இன்றும், எதிர்வரும் 15 ஆம் திகதியும் காலை 9 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக மாவட்டச் செயலக பொன்னம்மான் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு தவறாது சமுகமளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தல் வேண்டும். எந்தப் பரீட்சார்த்திக்கும் தனிப்பட்ட அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படமாட்டாது.

(சி-6806)





# UNIKCO

## COMPUTER CENTRE

★ BASIC ★ PASCAL ★ d BASE III PLUS
★ LOTUS 1-2-3 ★ WORD PROCESSING
(Word Star Rel 5-5)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்:**

11-6-93 (திங்கள், புதன், வெள்ளி) 12-6-93 (சனி, ஞாயிறு)

மேலதிக விபரங்கட்கு:

37, CLOCK TOWER ROAD, JAFFNA

(வெலிங்டன் சந்திக்கு அருகாமை) (சி-6804)



முல்லை மாவட்டக் கலைஞர்களின்

## முதலாவதுவெற்றிப்படைப்பு

# "தமிழோசை"

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30, மாலை 4 மணி, 6 மணி

(சி/6720)


# மரணஅறிவித்தல்கள்

## தம்பர் காசிப்பிள்ளை கந்தசாமி

[சாமியார்]

காரைநகர் களபூமி வளுப்போடையைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், தற்போது கலட்டி ஒழுங்கை வட்டுக்கோட்டையில் வசித்தவரும் முன்னாள் T. K. K. சுருட்டுக் கம்பனி உரிமையாளருமாகிய தம்பர் காசிப்பிள்ளை கந்தசாமி (சாமியார்) 8-6-93 அன்று இரவு காலமானார். இவர் சரவணமுத்து சீதேவிப்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரியாகிய சின்னம்மாவின் அன்புக் கணவரும். சரஸ்வதி, உருக்குமணி, அன்னமுத்து, பரஞ்சோதி, வரதராசா, வரதலிங்கம் (சவூதி) ஸ்ரீ பரந்தாமன் (சுவிஸ்,) கங்காசிவம் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். காலஞ்சென்ற பரமசாமி மற்றும் தருமராசா (தருமராசா ஸ்தாபனம் கிளிநொச்சி), பத்மநாதன், தம்பிஐயா ஆகி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற ஐயாத்துரை, மற்றும் T. K நடராசா காலஞ்சென்ற T. K முருகேசுவின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற வள்ளியம்மை மற்றும் விசுவலிங்கம், கந்தையா ஆகியோரின் மைத்துனரும், கனகமலர், கனகேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராசா, ஜெயரூபன், தனுஜா, இளங்கோ, கோமேஸ்வரி, தர்சினி, சிவகரன், சிவதர்சினி, செந்தூரன், துவாகரன், ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 9-6-93 அன்று இல்லத்தில் நடைபெற்று வளுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
க. கங்காசிவம்
மகன்

(4089)

## கனகசபை தாமோதரம்பிள்ளை

சாவகச்சேரி டச் வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய நில அளவை அத்தியட்சகர் 'கனகசபை' தாமோதரம்பிள்ளை காலமானார்.

அன்னார் காலம் சென்ற கௌரியம்மாளின் அன்புக் கணவரும், கணேசன் (Paranthan Chemicals), Dr. சிவபாதம் (Regional Epidomiologist), கனகசபை (I. D. B.), மல்லிகா, சீதா, சாவித்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயலட்சுமி, முகுந்தினி, ரதி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 10-06-93 அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனத்திற்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு 3-00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
Dr. சிவபாதம்
(மகன்)

(சி 6807)